மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) & (இ) : தாமரைப்பாக்கம் இணைப்புச் சாலைக்கு நாள் ஒன்றுக்கு 10 வழித் தடங்களில் 15 பேருந்துகள் 68 தடவைகள் செல்கின்ற காரணத்தால், பேருந்துகளின் எண்ணிக்கையை உயர்த்துவதற்கு எவ்வித நியாயமுமில்லை.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, 68 தடவைகள் தாமரைப் பாக்கத்திற்கு இந்தப் பேருந்துகள் சென்றாலும், அங்கு நெரிசல் அதிகமாக இருப்பதால் தாமரைப்பாக்கம் கூட்டுச் சாலைக்கு என்று தனிப் பேருந்துகளை சென்னையிலேயிருந்து விடுவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்களின் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளும் அளவில் பேருந்து வசதிகள் இல்லை.

தங்கசாலை—போந்தவாக்கம் பேருந்து வழித்தடம்

* 96 வினா—**திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை தங்கசாலைக்கும் போந்தவாக்கத்திற்குமிடையே ஈகுவார் பாளையம் வழியாகச் சென்று கொண்டிருந்த தனியார் பேருந்து நிறுத்தப்பட் டுள்ளதால் இவ்வழித் தடத்தில் பல்லவன் போக்குவரத்துக் கழகப் பேருந்து விடும் செயற்குறிப்பு உண்டா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : 1—6—1973 முதல் சென்னையி லிருந்து (பேசின் பிரிட்ஜிலிருந்து) கும்மிடிபூண்டி, ஈகுவார்பாளையம் வழி யாகப் போந்தவாக்கத்திற்குப் புதிய வழித்தடத்தில் பேருந்து விடப்பட் டுள்ளது.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, இந்தப் பேருந்தை 1–6–1973 முதல் விட்டதற்கு நன்றி சொல்லும் நேரத்தில், அதில் நெரிசல் அதிகமாக இருப்பதால் வேறொரு பேருந்தையும் அதற்கு இணையாக விடுவதற்கு அரசு முன்வருமா ?

THE HON. THIRU S. RAMACHANDRAN : Sir, there is no such proposal at present.